சார்பு நீதிமன்றம், இலால்குடி

முன்னிலை:– திருமதி.R.மோகனா, B.L.,

சார்பு நீதிபதி, இலால்குடி.

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 08 ம் நாள் திங்கட்கிழமை

I.A.No.2/2024 in OS.No.20/2024

(CNR.No.TNTP180000782024)

கருணாநிதி, த/பெ. S.ரெங்கநாதன், எண்.53A/51A, ஆசாரியார் தெரு, சிறுகாம்பூர், கரிமாணிக்கம் கிழக்கு கிராமம், மண்ணச்சநல்லூர் தாலுகா, திருச்சிராப்பள்ளி மாவட்டம். ......மனுதாரர்/வாதி

/எதிர்//

1. J.லீலாவதி (எ) லீலா *(இறப்பு)

2. J.மணிவாசகம், த/பெ. ஜெயபால், பிச்சையம்மன் நகர், சிறுகாம்பூர், மண்ணச்சநல்லூர் தாலுகா, திருச்சிராப்பள்ளி மாவட்டம் – 621 213.

3. J. ராகேஷ், த/பெ. ஜெயபால், பிச்சையம்மன் கோவில் நகர், சிறுகாம்பூர், மண்ணச்சநல்லூர் தாலுகா, திருச்சிராப்பள்ளி மாவட்டம் – 621 213.

*4. நிவேதிதா, த/பெ. ஜெயபால், பிச்சையம்மன் கோவில் நகர், சிறுகாம்பூர், மண்ணச்சநல்லூர் தாலுகா, திருச்சிராப்பள்ளி மாவட்டம் – 621 213.

.....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

(Amended as per order in IA.2/25 dated 19.03.2025)

**<u>மனு கோரிக்கை</u>**

வாதி/மனுதாரர் இந்த மனுவை உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 26 விதி 9 மற்றும் பிரிவு 151–ன் கீழ் தாக்கல் செய்துள்ளார். மதிப்பிற்குரிய நீதிமன்றம் ஒரு வழக்கறிஞர் ஆணையரை நியமித்து

உத்தரவிடக்கோரியும் மேலும், அவர் வழக்குச் சொத்திற்கு நேரில் சென்று, அங்குள்ள தற்போதைய நிலவரங்களையும், வழக்கின் வரைபடத்தில் 'ABCD' எனக் குறிக்கப்பட்டுள்ள வாதியின் சொத்திற்குள் பிரதிவாதிகள் செய்துள்ள ஆக்கிரமிப்புகள் உள்ளிட்ட பௌதிக அமைப்புகளையும் பார்வையிட்டு குறிப்பெடுக்கவும்; நில அளவைத் துறையால் பராமரிக்கப்படும் நில அளவை ஆவணங்களின் அடிப்படையில், தாலுகா நில அளவையரின் உதவியுடன் அவற்றை அளவீடு செய்து, அந்த அறிக்கையை இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க உத்தரவிடக்கோரியும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் நாள் – 15.02.2024

மனு முத்திரை கட்டணம் – ரூ.20/–

இம்மனுவானது 24.04.2026ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்காக இந்நீதிமன்றத்தின் முன்பு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.பூபதி அவர்கள் முன்னிலையாகியும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.அகிலாண்டேஷ்வரி அவர்கள் முன்னிலையாகியும், 1ஆம் எதிர்மனுதாரர் இறந்துவிட்ட நிலையிலும், இருதரப்பு வாத உரைகளை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

<u>உத்தரவாணை</u>

அ) மனு அனுமதித்து உத்தரவாணை பிறப்பிக்கப்படுகிறது.

ஆ) திரு. சிலம்பரசன், வழக்கறிஞர் பதிவு எண் 1591/2014–, நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்கிறார். நீதிமன்ற

ஆணையர் தகுதி வாய்ந்த நில அளவையர் கொண்டு தாவா சொத்தில் உள்ள ஆக்கிரமிப்புகள் ஏதேனும் இருப்பின் அதனை கண்டறியும் வகையில் தாவா சொத்தின் நான்கு எல்லைகளை நிர்ணயம் செய்து இருதரப்பினர்களுக்கும் முன் அறிவிப்பு கொடுத்துவிட்டு இடத்தை பார்வையிட்டு அளவீடு செய்து ஆக்கிரமிப்புகள் இருக்கிறதா என்பதை பொறுத்து அதற்கான அளவுகளுடன் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய அறிவுறுத்தப்படுகிறார். நீதிமன்ற ஆணையரின் ஊதியமாக ரூ.15,000/- நிர்ணயம் செய்யப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் ஊதியத்தை மனுதாரர்/ வாதி நீதிமன்ற ஆணையருக்கு நேரிடையாக செலுத்த உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் வாரண்ட் உத்தரவை பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் வாரண்டை நிறைவேற்றி ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய அறிவுறுத்தப்படுகிறார். நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் தாக்கல் செய்ய அழைக்க 04.07.2026.

**<u>Description of Propery</u>**

Tiruchirappalli District, Mannachanallur Sub Registration District, Mannachanallur Taluk, Old No.2/2, New No.33, Kariyamanickam East village, in Senthamaraikan Kudi Street, as per patta No.604, out of the land in Ayan Punja Old

Survey No.364/4, New Survey No.144/4B measuring Hectare 1.07.0 Ares equivalent to Acre 2.64 cents, out of which, A House site measuring Hectare 0.12.5 Ares equivalent to Acre 0.31 cents equivalent to 13,504 Sq. ft denoted as AEFG in the plaint plan within the following boundaries:

South of property situated in Survey No.144/4A belonging to the defendants;

West of property belonging to Marudhambal:

North of Property belonging to R.Selvendran,

East of South to North Panchayat Road.

The subject matter of the suit is the unlawful construction made by the defendants by encroaching into the North West portion of the suit property which belongs to the plaintiff absolutely in an extent of 6 cents equivalent to 2,613.6 Sq.ft denoted as ABCD in the plaint plan which is directed to be removed and to be handed over to the plaintiff.

**இந்த உத்தரவாணை இன்று 2026ஆம் ஆண்டு ஜுன் மாதம் 08ஆம் நாள் என்னால் கையொப்பம் செய்யப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையிட்டு வழங்கப்பட்டது.**

R.MOHANA Digitally signed by R.MOHANA

**சார்பு நீதிபதி,**

**இலால்குடி.**

Sub Court, Lalgudi

**IA.No.2/2024 in OS.No.20/2024**

Decreetal Order

**Dated – 08.06.2026**